

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.8.2025) சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் இரண்டாவது மாநில மாநாட்டில் தென்னிந்தியாவின் முதன்மையான உள்கட்டமைப்பு கட்டுமான இயந்திர வர்த்தகக் கண்காட்சியினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் மாநில தலைவர் திருசங்கு, முதன்மை நிருவாக அலுவலர் பூபிந்தர் சிங், மாநாட்டு குழு தலைவர் சுப்ரமணியம், அகில இந்திய கட்டுனர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ராதாகிருஷ்ணன், மாநில செயலாளர் வெங்கடேசன், கட்டுமானத் துறையைச் சார்ந்த சங்க நிருவாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.8.2025) சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் இரண்டாவது மாநில மாநாட்டில் தென்னிந்தியாவின் முதன்மையான உள்கட்டமைப்பு கட்டுமான இயந்திர வர்த்தகக் கண்காட்சியினை திறந்து வைத்து மாநாட்டு மலரினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் மாநில தலைவர் திருசங்கு, முதன்மை நிருவாக அலுவலர் பூபிந்தர் சிங், மாநாட்டு குழு தலைவர் சுப்ரமணியம், அகில இந்திய கட்டுனர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ராதாகிருஷ்ணன், மாநில செயலாளர் வெங்கடேசன், கட்டுமானத் துறையைச் சார்ந்த சங்க நிருவாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டிற்காக போடப்படுகின்ற சாலைகள் – கட்டடங்கள்

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான சாலை வரைபடம்!

### சென்னை வர்த்தக மையத்தில், கட்டுமான இயந்திர வர்த்தகக் கண்காட்சி ஒப்பந்ததாரர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை,ஆக.30-**

**சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், கட்டுமான இயந்திர வர்த்தகக் கண்காட்சி - நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் 2-வது மாநில மாநாடு ஆகியவற்றை, நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து, வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``நம் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, தமிழ்நாட்டில் உருவாக்கப்படுகிற கட்டுமானங்கள் மற்றும் சாலை உள்கட்டமைப்புகளே தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான சாலை வரைபடம்” என்று புகழாரம் சூட்டி வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இன்றைக்கு தென்னிந்திய அளவில் முதன்முறையாக நடத்தப்படுகின்ற உட்கட்டமைப்பு, கட்டுமான இயந்திர வர்த்தகக் கண்காட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் இரண்டாவது மாநில மாநாட்டை, உங்கள் முன்னிலையில் தொடங்கி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

அதுமட்டுமல்ல, நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஒப்பந்ததாரர்களின் நலம் காக்கின்ற வகையில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளுக்காக அரசுக்கும், முதலமைச்சருக்கும் நன்றி தெரிவிக்கின்ற விழாவாகவும், உங்கள் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

#### பல்வேறு பணிச்சுமைகள்

இங்கு அண்ணன் எ.வ.வேலு அவர்கள் குறிப்பிட்டது போல, இந்த நிகழ்ச்சியில், நம் முதலமைச்சர் அவர்கள்தான் முதலில் கலந்து கொள்வதாக இருந்தது. பல்வேறு பணிச்சுமைகளின் காரணமாக முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து கலந்துகொள்ள வேண்டும் என்று உரிமையோடு உத்தரவிட்டதால், இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன்.

கிட்டத்தட்ட இன்றைக்கு இந்த அரங்கில், ஆயிரக்கணக்கான ஒப்பந்ததாரர்கள் வருகை தந்துள்ளீர்கள். உங்களின் முகத்தில் தெரிகின்ற மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் பார்க்கும்போது, நம்முடைய திராவிட மாடல் அரசு ஒப்பந்ததாரர்களுக்கு எந்த அளவுக்கு உற்றத்துணையாக இருக்கிறது என்பதை, என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

அரசு தீட்டுகின்ற, சொல்கின்ற திட்டங்கள், கொடுக்கின்ற வாக்குறுதிகளையெல்லாம் செயல் வடிவமாக காட்டுவது நீங்கள்தான். தாள்களில் வரைபடமாக இருக்கும் திட்டங்களை, இன்றைக்கு சாலைகளாக, மேம்பாலங்களாக, உயர்ந்த கட்டடங்களாக மாற்றிக் காட்டுபவர்கள் நீங்கள்தான். உங்களைப்போன்ற எண்ணற்ற ஒப்பந்ததாரர்களின் உழைப்பால்தான்




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.8.2025) சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் இரண்டாவது மாநில மாநாட்டில் சிறப்புரையாற்றினார்.

இன்றைக்கு இந்தியாவிலேயே அதிநவீன உட்கட்டமைப்பு கொண்ட முதல் மாநிலமாக நம் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த முழுபெருமையும் உங்களைத்தான் சேரும்.

#### சமூக பொருளாதார வளர்ச்சி

ஒரு ஊர் வளர வேண்டும் என்றால், அந்த ஊரில் இருக்கின்ற அனைத்து அடிப்படை வசதிகளும், கட்டமைப்புகளும் சரியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அங்குள்ள மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு அது முக்கிய பங்கு வகிக்கும். வெளிநாடுகளில் இருந்து வருகின்ற வெளிநாட்டவர்கள், இந்தியாவிற்கு தொழில் நிறுவனங்கள் வருகின்றன என்றால், அவர்களெல்லாம் தேர்வு செய்கின்ற இந்தியாவிலேயே முதல் மாநிலம் நம் தமிழ்நாடாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஏனென்றால், எளிதாக வணிகம் செய்வதற்கான வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாலை வசதிகளில் தமிழ்நாடுதான் இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு, இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக நம் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

#### நூற்றாண்டு நூலகம்

குறிப்பாக, நம் ஆட்சிக்காலத்தில் பல பிரமாண்டமான உட்கட்டமைப்பு வசதிகளை, நீங்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறீர்கள். உதாரணத்திற்கு, சென்னை கிண்டியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் உயர் சிறப்பு மருத்துவமனை, சென்னை மெரினா கடற்கரையில் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவு மண்டபம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், சென்னை கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம், கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை-திருவள்ளுவர் சிலைக்கு இடையே கடுமையான சூழலையும் எதிர்கொண்டு 37 கோடி ரூபாய் எனும் மிக குறைவான பட்ஜெட்டில், மிகப்பிரமாண்டமான கண்ணாடி மேம்பாலம், திருச்சியில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம், இப்படி மிகப்பெரிய கட்டுமானங்களை மிகக் குறுகிய காலத்தில் நீங்கள் கட்டி சாதனை படைத்திருக்கிறீர்கள்.

#### சர்வதேச மாநாட்டு அரங்கம்

அதுமட்டுமல்ல, உலகத்திலேயே முதன்முறையாக, சென்னையில் மெட்ரோ வழித்தடத்திற்கு மேற்புற சாலையில், 640 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேனாம்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரை மேம்பாலம் அமைத்துக்கொண்டு வருகிறீர்கள். சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் கலைஞர் சர்வதேச மாநாட்டு அரங்கம் அமைக்கும் பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

மதுரை, கோரிப்பாளையம் மேம்பாலம், வேலூர் சத்துவாச்சாரி, காங்கேயநல்லூர் மேம்பாலம், திருச்சி ஸ்ரீரங்கம் காவேரி ஆற்று மேம்பாலம், திருச்சியில் காமராஜர் நூலகம், கோவையில் பெரியார் நூலகம் என தமிழ்நாட்டில் அடுத்த நூற்றாண்டுக்கு தேவையான அனைத்து கட்டுமானங்களையும் நீங்கள்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

முந்தைய 10 ஆண்டுகால ஆட்சியில் ஒப்பந்ததாரர்களுக்கு பல்வேறு சிக்கல்கள் இருந்தன. இங்கு உங்கள் அமைச்சர் பேசும்போது ,குறிப்பிட்டுச் சொன்னார். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான, திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, `ஒப்பந்ததாரர்களுக்கு ஒரு பொற்காலம்’ என்று சொல்கிற அளவுக்கு பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள், நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு உங்களுக்கு வழங்கி இருக்கிறது.

#### இரு மடங்கு அதிகம்

குறிப்பாக, 2021-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் சுமார் 1,074 நெடுஞ்சாலை ஒப்பந்ததாரர்கள் மட்டுமே பதிவு செய்திருந்தார்கள். ஆனால், நம் அரசு அமைந்த பிறகு ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்வதற்கான வழிமுறை எளிமையாக்கப்பட்டதால் இந்த நான்கு வருடங்களில் மட்டும் 1,300 புதிய ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்து இருக்கிறார்கள். இது முந்தைய ஆட்சியின் எண்ணிக்கையைவிட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகம் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, ஒப்பந்தங்களை, இறுதி செய்வதில் இ-பதிவுமுறையை நமது அரசு அறிமுகப்படுத்தியது. 2021-ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியை உண்மையாக்குகின்ற விதத்தில் ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு ஒப்பந்ததாரருக்கு 5 ஆண்டு ஒப்பந்தம் வழங்கும் முறையை நம் முதலமைச்சர் அவர்கள் உங்களின் கோரிக்கையை ஏற்று, ரத்து செய்தார்கள். ஒன்றிய அரசு சாலைப் பணிகள் மேற்கொள்கின்ற ஒப்பந்ததாரர்களுக்கான ஜி.எஸ்.டி. தொகையை 6 சதவிகிதத்தில் இருந்து 12 முதல் 18 சதவிகிதம் வரை உயர்த்தியது ஒன்றிய அரசு. இந்த நெருக்கடியை உடனடியாக உணர்ந்த நம் முதலமைச்சர் அவர்கள் அந்த இழப்பை ஈடு செய்வதற்காக உடனடியாக 256 கோடி ரூபாயை, உங்களுக்காக உயர்த்தி ஒதுக்கிக் கொடுத்தார்கள்.

இவை மட்டுமல்ல, இன்றைக்கு உங்களுக்காக பல்வேறு திட்டங்களை நம் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் கொடுப்பார்கள். உங்களின் அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள், நம் முதலமைச்சர் அவர்களிடம் பேசி, உங்களுக்கான திட்டங்களை நிச்சயம் உங்களிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பார்கள்.

நீங்கள் தமிழ்நாட்டிற்காக போடுகின்ற சாலைகளும், எழுப்புகின்ற கட்டடங்களும்தான் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான சாலை வரைபடம் என்று சொல்வதில் மிகையில்லை. இந்த அரசு என்றைக்கும் உங்களுக்கு பக்கபலமாக இருக்கும். உங்களுடன் கைகோர்த்து, தமிழ்நாட்டை இன்னும் பல உயரங்களுக்கு நிச்சயம் கொண்டு செல்வார், நம் முதலமைச்சர் அவர்கள்.

இந்த அரசுக்கு நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் மட்டுமல்ல, அனைத்து ஒப்பந்ததாரர்களும் ஆதரவாக இருக்க வேண்டும் என்று, இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொண்டு, இங்கே தொடங்கி வைக்கப்பட்டுள்ள வர்த்தகக் கண்காட்சி சிறக்கட்டும். நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் பணிகள் மேன்மேலும் சிறப்படைய, எனது அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, அரசு செயலாளர் செல்வராஜ் ஐ.ஏ.எஸ்., ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் திரிசங்கு, சென்னை - கன்னியாகுமரி தொழில் தட திட்டத்தின் திட்ட இயக்குநர் பாஸ்கர பாண்டியன் ஐ.ஏ.எஸ்., முதன்மை நிர்வாக அதிகாரி குபேந்திர சிங், மாநாட்டுக் குழுத் தலைவர் சுப்பிரமணியன், முன்னாள் அகில இந்திய தலைவர் ராதாகிருஷ்ணன், தொழில் நுட்பப் பொறியாளர் சந்திரசேகர், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை மனோகரன், நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் மாநிலச் செயலாளர் வெங்கடேசன், நிர்வாகிகள் ஐயப்பன், முருகேசன், நெம்ரோன், முத்துகோவிந்தன், ஆலோசகர் மோகன், கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் கோல்டு பிரகாஷ், லோகேஷ் உள்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.